**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC –99/2021**

**வழக்கு சாட்சி :PW6(LW10)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெக்ஸ் ஸ்டாலின் | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர், மத்திய மண்டல காவல் துறை தலைவர் அலுவலகம் , திருச்சி |
| தந்தை பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(1 ம் எதிரி ஆஜர் இல்லை . 2 ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 08th day of April 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

1. நான் தற்போது மத்திய மண்டல காவல் துறை தலைவர் அலுவலகம் ,திருச்சியில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.06.2021 –ம் தேதி நான் இலுப்பூர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த பொழுது இலுப்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பட்ட இன்டிமேஷனின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மணிகண்டன், த/பெ.கருப்பையா என்பவரிடம் புகார் வாக்குமூலத்தினைப் பெற்று நிலையம் வந்து நிலையக் குற்ற எண்: 326/2021 இதச பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **( முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** .

2. பின்னர் அன்றைய தினமே சம்பவ இடத்திற்கு மதியம் 13.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் துரையன் மற்றும் மூக்கையா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.8 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பட்டியல் சாட்சிகளான 1 முதல் 9 வரையானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் 09.07.2021 ம் தேதி மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் எதிரிகளை கைது செய்யவில்லை.

4. பின்னர் 30.08.2021 ம் தேதி காயம்பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திரு.சுதர்சன், திரு.சரவணன், திரு.சலீம் அப்துல் குத்தூஸ் என்பவர்களை விசாரித்து அவர்கள் வழங்கிய விபத்து பதிவேடு, கருத்துரை, காயச்சான்றிதழ் ஆகியவற்றை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்ட மணிகண்டன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மணிகண்டனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச்சான்று வழங்கியதன் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டபிரிவை 294(b), 324,506(ii) IPC லிருந்து 294(b), 326,506(ii) IPC ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5.வழக்கு சொத்தான சுமார் 25 செ.மீ நீளம் உள்ள முனை வளைந்த நிலையில் உள்ள கூரான குத்து ஈட்டி மற்றும் 2 செ.மீ அளவுள்ள உடைந்த நிலையில் உள்ள கைப்பிடி ஒன்றும் படிவம் –91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தேன். மேற்படி, **( படிவம் –91 அ.சா.ஆ.11/PW5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அரசு தரப்பில் அனைத்து சாட்சிகளையும் விசாரணை செய்து எதிரிகள் மீது மேற்சொன்ன பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எ.த.கு.வி</u>

1. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய தினத்திற்கு மறுநாள் 22.06.2021 ம் தேதி இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அ.சா.1 னிடம் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு அதன் பின்பு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் 22.06.2021 ம் தேதி தான் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து இலுப்பூர் காவல் நிலையத்திற்கு இன்டிமேசன் அனுப்பப்பட்டது. இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்றவுடன் அ.சா.1 ன் விபத்து பதிவேட்டை மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட பின்பு தான் புகார் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 ன் விபத்து பதிவேட்டில் 21.06.2021 ம் தேதி இரபு 08.30 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. காவல் நிலையத்திற்கு அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தது சம்மந்தமாக எந்த தேதி, எத்தனை மணிக்கு , இன்டிமேசன் பெறப்பட்டதாக இன்டிமேசன் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இன்டிமேசன் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது, நேரம் நினைவில் இல்லை. பொதுவாக சிகிச்சைக்கு சேர்ந்த உடனே காவல் நிலையத்திற்கு மருத்துவமனையில் இருந்து தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். 21.06.2021 ம் தேதி அ.சா. 1 மருததுவமனையில் சிகிச்சையில் இருந்ததாக காவல் நிலையத்திற்கு இன்டிமேசன் வரப்பட்டதா என்றால் இல்லை. மறுநாள் 22.06.2021 ம் தேதி எத்தனை மணிக்கு இன்டிமேசன் வரப்பட்டது என்றால் ஆவணங்களில் அது பற்றி குறிப்பிடவில்லை.

3. நான் அரசு மருத்துவமனைக்கு சென்று அ.சா.1 னிடம் புகார் வாக்குமூலம் வாங்கியதாக சொல்லும் தினத்தன்று மருத்துவமனையில் இருந்து ஈட்டி எதுவும் கைப்பற்றினேனா என்றால் புகார் வாக்குமூலத்தோடு அ.சா.1 ற்கு உதவியாக இருந்த சாட்சி பெரியசாமி என்பவர் கொடுத்ததை படிவம் 91 ன் மூலம் கைப்பற்றினேன். நான் மேற்சொன்ன ஈட்டியை கைப்பற்றியது சம்மந்தமாக சாட்சிகளை விசாரணை செய்து சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகார்தாரரே வழக்கின் சொத்தை ஆஜர் படுத்தியதால் கைப்பற்றுதல் மகஜர் தனியாக தயார் செய்யவில்லை.

4. வழக்கு சம்பவம் இடம் சென்று வேறு ஏதாவது வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. ஈட்டியுடன் உடன் இருந்த மரக்குச்சி எதுவும் கைப்பற்றினேனா என்றால் சம்பவ இடத்தில் மரக்குச்சி எதுவும் இல்லை, சாட்சிகளும் அதுப் பற்றி தெரியாது என கூறிவிட்டனர். வழக்கு சம்பவ இடத்தில் மாதிரி இரத்த மண் கரை அல்லது வேறு எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லக்கூடிய அளவிற்கு தடயப் பொருள் ஏதேனும் சேகரித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் இரண்டு பார்வை மகஜர் சாட்சிகளும் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய பகுதியில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான், நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது பார்வை மகஜர் சாட்சிகள் தான் அப்போது நின்று இருந்தார்கள். இந்த இரண்டு நபர்களை தவிர மற்ற வேறு நபர்கள் அங்கு இல்லை என்றால் வேறு யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை.

5. வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய இடத்தில் நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அ.சா. 1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் மருத்துவர் தான் ஈட்டியை முதுகில் இருந்து எடுத்தார் என புகார் வாக்குமூலம் கொடுத்ததற்கு பின்னிட்டும், அன்றைய தினம் மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை. பின்பு மருத்துவரை விசாரணை செய்த போதும் ஈட்டியை காண்பித்து விசாரித்து வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை. இலுப்பூர் அரசு மருத்துவமனை மருத்துவரிடம் மட்டுமே காயச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது என்றால் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவர் கொடுத்த வழங்கிய கருத்துரையின் அடிப்படையில் இலுப்பூர் அரசு மருத்துவமனை மருத்துவர் காயச்சான்று வழங்கியுள்ளார்.

6. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 11 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றாலும், காலதாமதம் குறித்து இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். அ.சா. 1 மேல்சிகிச்சை எடுத்ததாக சொல்லப்படும் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவரை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவர் தனது விசாரணையில் அ.சா.1 எத்தனை மணிக்கு சிகிச்சையில் சேர்ந்தார் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளரா என்றால் 22.06.2021 ம் தேதி சிகிச்சைக்கு சேர்ந்ததாக சொல்லியுள்ளார், நேரம் சொல்லவில்லை. புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அ.சா. 1 சிகிச்சைக்கு சேர்ந்தது சம்மந்தாக விபத்து பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. கண்ணுற்ற சாட்சிகளாக அவரது உறவினர்களை தவிர, மற்ற யாரையும் விசாரணை செய்து சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் சம்பவத்தை கண்ணுற்றவர்களை மட்டும் தான் சாட்சியாக சேர்த்துள்ளேன். பார்வை மகஜர் சுமார் 01.45 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தை சரிவர விசாரணை செய்யாமல் இந்த எதிரிகள் மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களான மாதிரிவரைபடம், பார்வைமகஜர், படிவம் 91 வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

8. வழக்கு சொத்தை முறையாக கைப்பற்றப்பட்டிருந்தால் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியிருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட அரசு தரப்பு சாட்சிகளை சரியாக புலன்விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்தில் இருந்து எந்த விதமான இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான்.